### தமிழ் நாட்டிற்கு தேவையான விவசாயம் மற்றும் கிராமப்புற வங்கி கடன்களில்

# நபார்டு வங்கியின் பங்களிப்பை அதிகரிக்க, அரசின் முயற்சிகள் பயனுள்ளதா?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, டிச.18-

திராவிட முன்னேற்றக் கழக அரக்கோணம் நாடாளு மன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன மக்கள வையில் தமிழ் நாட்டிற்கு தேவையான விவசாயக் கடன், மற்றும் கிராமப்புற வங்கி கடன்களில், நபார்டு வங்கிகளின் உதவி பயனுள்ள தாக அமைந்துள்ளதா? என் றும் சிறு குறு தொழிற் கடன் கள், கிராமப்புற கட்டமைப்புகளுக்கான நிதி யுதவி. ஊரக மேம்பாட்டு திட்ட உதவி ஆகியவற்றில் நபார்டு வங்கிகளின் பங்க ளிப்பு எவ்வாறு உதவியாக உள்ளது? என்பது குறித்து உறுப்பினர்களுக்கு தெரி விக்க இயலுமா? என்று ஒன் றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்களிடம் விரி வான கேள்வியை எழுப்பி னார்.

இதற்கு ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில்;வரு மாறு:

நபார்டு என்றழைக்கப்ப டும விவசாயம் மற்றும் கிரா மப்புற மேம்பாட்டு தேசிய வங்கி, கூட்டுறவு வங்கிகள், கிராம்புற வங்கிகள் ஆகிய வற்றிற்கு நீண்ட கால நிதி ஆதாரமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் அனைத்து மாநி லங்களுக்கும் ரூபாய் 5,47,822 கோடிகள் அளவிற்கு நிதியுத வியை ஒன்றிய அரசு அளி;த்துள்ளது என்றும், தமிழ் நாட்டிற்கென ரூபாய் 59,968 கோடிகள் அளவிற்கு நிதியுதவி செய்யப்பட்டுள் ளது என்றும், அனைத்து மாநில கூட்டுறவு வங்கிக ளுக்கு, கடந்த ஐந்து நிதி ஆண்டுகளில், குறைந்த கால நிதி ஆதாரமாக ரூபாய் 7,12,221 கோடிகள் அளவிற் கும், தமிழ்நாட்டின் கூட்டு றவு வங்கி களுக்கென ரூபாய் 2,77,866 கோடிகள் அளவிற் கும் தமிழ் நாட்டின் கிராமப் புற வங்கிகளுக்கென ரூபாய் 19,730 கோடிகள் அளவிற் கும் ஒன்றிய அரசின் நபார்டு வங்கி நிதியுதவி அளித்துள் ளது என்று இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

கடந்த 13 நிதி யாண்டுக ளில், அனைத்து மாநிலங்க ளுக்கென குறைந்த கால கூட் டுறவு வங்கி கடன் நிதியமாக, ரூபாய் 6,32,542 கோடிகள் அளவிற்கும், தமிழ் நாட்டிற் கென ரூபாய் 35,268 கோடி கள் அளவிற்கும் நபார்டு வங்கி நிதியளித்துள்ளது என் றும் அனைத்து மாநில குறைந்த கால கிராமப்புற வங்கி கடன் நிதியமாக ரூபாய் 9,74,39,970 கோடிகள் என்ற அறவிற்கும் தமிழ் நாட் டிற்கென ரூபாய் 8390 கோடி கள் என்ற அளவிற்கும் நபார்டு வங்கி நிதியுதவி அளித்துள்ளது என்றும் ஒன் றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்கள் திராவிட முன்னேற்றக்கழக அரக்கோ ணம் நாடாளுமன்ற உறுப்பி னர் டாக்டர் எஸ். ஜெகத்ரட் சகன கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### சேலம் விமான நிலையத்தின்

# ஓடுபாதையின் நீளத்தை உடனடியாக அதிகரிக்க வேண்டும்!

## மக்களவையில் டாக்டர்.கலாநிதி வீராசாமி வலியுறுத்தல்!



புதுடெல்லி, டிச. 18-

டாக்டர் கலாநிதி வீரா சாமி எம்.பி பாராளு மன்றத்தில் விதி 377 ன் கீழ் பேசியதாவது:-

தற்போது சேலம் விமான நிலையத்தின் ஓடுபாதை யின் நீளம் 1800 மீட்டர் தான் உள்ளது . இதனால் பெரிய விமானங்களை இயக்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் பெரிய விமானங்கள் எல்லாம் சேலத்துக்கு அடுத்து உள்ள பெரிய விமான நிலை யங்களில் இயங்குகின்றன. தற்போது சேலம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் தொழிற்சாலைகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் பெருகி வருவதால் அங்கு பொருளாதார வளர்ச்சி அதிகரித்து வருகிறது. இதனால் விமானங்களைப் பயன்படுத்தி பிரயாணம் செய்பவர்கள் எண்ணிக்கை யும் அதிகரித்து வருகிறது.

இதனால் விமானப் பிரயாணம் செய்பவர்களும் பொதுமக்களும் சேலம் விமான நிலையத்தின் ஓடு பாதையைத் தற்போது உள்ள 1800 மீட்டர் நிலத்தி லிருந்து 3000 மீட்டர் அள விற்கு நீட்டிக்க வேண்டும் என்று நீண்ட காலமாக கோரி வருகின்றனர் அவ் வாறு செய்தால்,

இவ்விமான நிலை யத்தின் பெரிய அளவிலான விமானங்களையும் இயக்க முடியும் இதனால் பெரிய நகரங்களில் உள்ள விமான நிலையங்களுடன் இணைப்பு கள் அதிகரித்து இப்பகுதி யின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஊக்கம் தருவதாக அமையும்.

எனவே சிவில் விமானத்துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக சேலம் விமான நிலையத்தின் ஓடுபாதையின் நீளத்தை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை உடனடி யாக மேற்கொள்ளுமாறு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு டாக்டர். கலாநிதி வீராசாமி பேசினார்.

# திருத்த மசோதா, இந்திய காப்பீட்டுத்துறைக்கு எதிராக இருக்கிறது!

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் குற்றச்சாட்டு!



புதுடெல்லி, டிச. 18-

திருத்த மசோதா இந்திய காப்பீட்டுத்துறைக்கு எதிராக இருப்பதால், அதனை ஏற் றுக்கொள்ள முடியாது என்று தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கூறினார்.

மக்களவையில் 'சப்கா பீமா சப்கி ரக்ஷா (காப்பீட்டுச் சட்டங்கள் திருத்தம்) மசோதா, 2025 அறிமுகப்ப டுத்தப்பட்டது. இதனை தி.மு.க. எம்.பி.க்கள் எதிர்த்த னர். தென்சென்னை தொகுதி எம்.பி. தமிழச்சி தங்கபாண் டியன் இந்த திருத்தத்துக்கு எதிராக பேசியதாவது:

மசோதாவின் பிரிவு 2 சிஜ திருத்துவது, இந்தியாவில் காப்பீட்டுத் துறையில் வெளி நாட்டு காப்பீட்டு நிறுவனங் களுக்கு முழுமையான அதி காரத்தை வழங்குவதாகும். இது தேசத்தின் இறை யாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கு எதிரா னது மற்றும் அரசியலமைப்பு விதிகளின் மீறலாகும். மசோ தாவின் பிரிவு 2 சி.ஏ.ல் உள்ள உட்பிரிவுகள் ஏ மற்றும் பிஜச் சேர்ப்பது தேசிய காப்பீட்டு நிறுவனங்களின் நலன்க ளுக்கு எதிரானது. ஏனெனில் (ஏ) சிறப்புப் பொருளாதார மண்ட லங்கள் சட்டம், 2005 இன் விதிகளின் கீழ் அமைக் கப்பட்டுள்ள சர்வதேச நிதிச் சேவை மையங்கள் உள்பட எந்தவொரு சிறப்புப் பொரு ளாதார மண்டலத்திலும் உள்ள ஒரு காப்பீட்டாளர் அல்லது காப்பீட்டு இடைத்த ரகருக்கு இது பொருந்தாது.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டம், 2005 இன் விதிகளின் கீழ் அமைக் கப்பட்டுள்ள சர்வதேச நிதிச் சேவை மையங்கள் உள்பட எந்தவொரு சிறப்புப் பொரு ளாதார மண்டலத்திலும் உள்ள காப்பீட்டாளர் அல் லது காப்பீட்டு இடைத்தரக ருக்கு, அறிவிப்பில் குறிப்பிடப்படக்கூடிய விதி விலக்குகள், மாற்றங்கள் மற்றும் தழுவல்களுடன் இது பொருந்தும். இது காப்பீட் டுத் துறையில் 100 சதவீதம் வெளிநாட்டு நிறுவனங்க ளுக்கு வழிவகுக்கிறது. இது இந்திய காப்பீட்டுத் துறைக்கு எதிராக இருப்பதால், இது ஏற்றுக்கொள்ள முடியாதது. மேலும் நியாயப்படுத்த முடி யாதது.

மேற்கூறிய ஆட்சேபனை களின் பார்வையில், இந்த மசோதா நாடாளுமன்றத் தின் அதிகார வரம்புக்கு அப் பாற்பட்டதாகவும், இந்திய அரசிய லமைப்பை மீறுவதா கவும் இருப்பதால், ஆரம்ப நிலையிலேயே நிராகரிக்கப் பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசி னார்.

# தமிழ்நாட்டில் புதிய வேளாண் அறிவியல் மையம் அமைக்கப்படுமா?

## மக்களவையில் சி.என். அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, டிச.18-

நாடாளுமன்ற கூட்டத் தொடர் நடந்து வரு கிறது. நேற்றைய கேள்வி நேரத்தின்போது திரு வண்ணாமலை தி.மு.க. எம்.பி. சி.என்.அண்ணாதுரை வேளாண்மைமற்றும்விவசா யிகள் நலத்துறை அமைச்சரி டம் கேள்வி எழுப்பினார். கேள்வி வரு மாறு, தமிழ்நாட்டில் தற் போது செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் மையங் களின் (கே.வி.கே) எண் ணிக்கை மற்றும் மாவட்ட வாரியான விவரங்கள் யாவை?

வேளாண் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் தொழில்நுட் பப் பரவலை வலுப்படுத்தும் நோக்கில், குறிப்பாக ராம நாதபுரம் மற்றும்காஞ்சிபுரம் மாவட்டங்களில், தமிழ்நாட் டில் ஏதேனும்புதிய வேளாண் அறிவியல் மையங் களை அமைக்க அரசு உத்தே சித்துள்ளதா? ஆம்எனில், அதன் விவரங்கள் தெரிவிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள வேளாண் அறிவியல் மையங் களின் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் திறன் மேம்பாட்டிற்காக எடு க்கப் பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை?


ராமநாதபுரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள் உட்பட தமிழ்நாட்டில் உள்ள வேளாண் அறிவியல் மையங்களின் செயல்பாடு மற்றும் செயல்பாட்டு வரம்பு குறித்து ஏதேனும் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள் ளதா? ஆம் எனில், அதன் முக்கிய கண்டுபிடிப்புகள் யாவை?

ராமநாதபுரம், காஞ்சிபு ரம் மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களில் உள்ள வேளாண் அறிவியல் மையங் களின் செயல்பாடுகளில் விவ சாயிகளின் பங்கேற்பு, பெண்களின் ஈடுபாடு மற்றும் நவீன தொழில்நுட்பங்களின் பயன் பாட்டை மேம்படுத்து வதற்காக அரசாங்கத்தால் எடுக்கப்பட்டு வரும் நடவ டிக்கைகள் யாவை? என கேள்வி எழுப்பினார்.

### சோழிங்கநல்லூர் மத்தியப் பகுதி துணைச் செயலாளர்

# பள்ளிக்கரணை வே.வீ.குமரேசன் தந்தை வி.வீராசாமி மறைவு!

## கழக நிர்வாகிகள் அஞ்சலி!



சென்னை, டிச.18

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மத்தியப் பகுதித் துணைச் செயலா ளர் பள்ளிக்கரணை வே.வீ.குமரேசன் தந்தையும், ஒன்றி யப் பிரதிநிதி வி.வீராசாமி நேற்று (17.12.2025 - புதன்கிழமை) மாலை 5 மணி அளவில் இயற்கை எய்தினார் என் பதை ஆழ்ந்த வருத்தத்து டன் தெரிவித்துக் கொள்கி றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்ததும் கழக நிர்வாகிகள் அன் னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (18.12.2025 - வியாழக்கிழமை) மாலை 3 மணி அள வில், எண். 2, துலுக்காத்தம் மாள் கோயில் 12 வது குறுக்கு தெரு, பள்ளிக்கர ணையில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து புறப்பட்டு பள்ளிக்கரணை மல்லிகேஸ் வர் நகர் இடுகாட்டில் நல்ல டக்கம் செய்யப்படுகிறது.

### மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர்

# வி.எஸ். ராமகிருஷ்ணன் சகோதரர் மனைவி மரகதம் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



காஞ்சிபுரம் டிச.18 -

மாநில வர்த்தக அணி துணை செய லாளர் வி. எஸ். ராம கிருஷ்ணன் சகோத ரர் சங்குபாணி மனைவி மரகதம் உடல்நலக்குறைவி னால் நேற்று (17.12.2025 - புதன் கிழமை( காலை 11 மணியளவில் மறைவெய்தி னார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்தும் கழகத்தி னர் மற்றும் உறவி னர்கள் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி னர்.

அம்மையாரின் இறுதி ஊர்வலம் இன்று(18.12.2025) பிற்பகல் 2 மணியள வில் பெரிய காஞ்சிபுரம் வைகுண்டபுரம் தெருவில் உள்ள இல்லத்திலிருந்து புறப்பட்டு தாயார்குளம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகின்றது.

# "வந்தே மாதரம் பாடலும், வம்பளந்த பிரதமரும்!"

வந்தே மாதரம் பாடலின் 150ஆவது ஆண்டு விழா விவாதத்தை மக்களவையில் (08.12.2025) பிரதமர் மோடி தொடங்கி வைத்து பேசியுள்ளார். மோடி, அமித் ஷா உள்ளிட்ட ஆளும் பா.ஜ.க. கூட்டணிக் கட்சியினர்க்கு, காங்கிரஸ், தி.மு.க., கம்யூனிஸ்ட் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தக்க பதிலளித்துப் பேசியுள்ளன. முன்னாள் பிரதமர் நேருவை இழிவுபடுத்திப் பேசிய பா.ஜ.க.வுக்குக் காங்கிரஸ் பதிலடி தந்துள்ளது.

"வந்தே மாதரம்" பாடலைத் தேசிய கீதமாக மகாத்மா காந்தி கருதிய நிலையில், திருப்திப்படுத்தும் அரசியலுக்காக அந்தப் பாடலின் பல பத்திகளைக் காங்கிரஸ் நீக்கி மகாத்மா வின் விருப்பத்தை நிராகரித்தது" என்று பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார் . ஏதோ காந்தியார் மேல் தணியாத பற்று உள்ளது போலவும், தன்னை ஒரு காந்தியினுடைய தொண்டரைப் போலவும் பாராளுமன்ற விவாதத்தில் முன்னாள் பிரதமர் நேரு மீதும், காங்கிரஸ் மீதும் குற்றச்சாட்டுகள் சொல்லி பேசியிருக்கிறார் மோடி.

விக்சித் பாரத் ரோஜ்கர் மற்றும் அஜீவிகா மிசன் (கிராமின்), என்ற பெயர் மாற்றம் செய்து காந்தியின் பெயரில் இருந்த 100 நாள் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தைக் சீர்குலைத்து, கிராமப்புற ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தைக் கெடுத்ததுடன் அம்பானி, அதானியின் கூட்டாளியான மோடி கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆட்கள் குறைப்பும், பல்லாயிரம் கோடி நிதி குறைப்பும் செய்த இந்த பெரும் முதலாளிகளின் கூட்டாளியான மோடி தான் காந்தியாரைப் பற்றிக் குவளை, குவளையாகக் கண்ணீர் விட்டுள்ளார். மோடி தனது மாநிலத்தில் தேசப்பிதாவான காந்தியாரின் பேரன் கோபாலகிருஷ்ண காந்தி இந்திய குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில் நின்ற போது, அவரை எதிர்த்து வெங்கய்யா நாயுடுவை நிறுத்தி வெற்றி பெறச் செய்து, காந்தியின் பேரனைத் தோல்வியுறச் செய்தவர்தான் இந்த அரிச்சந்திர மகாராஜா மோடி!

ஆங்கிலேயர் காலத்தில், வங்காளத்தைச் சேர்ந்த முதல் டெப்டி கலெக்டர் பங்கிம் சந்திரர் சாட்டர்ஜி என்ற சனாதனப் பிராமணர் எழுதிய 'ஆனந்த மடம்' எனும் நாவலில் இப்பாடல் புனையப்பட்டு இருக்கிறது. இந்து முஸ்லிம் மோதல்களை மையமாகக் கொண்ட நாவல். சத்யானந் என்ற பிராமணத் துறவியின் தலைமையில் மக்களைத் திரட்டுவதற்காக இப்பாடல் பாடப்படுகிறது. முஸ்லிம் கிராமங்கள் குடியிருப்புகள். மீது தாக்கி நெருப்பு வைத்து அழிக்கும் செயல் தொடர்கிறது. முஸ்லிம்களை இந்துக்களாக மதமாற்றம் செய்கின்றனர்; "கொல்லுங்கள்! முஸ்லிம் பேய்களைக் கொல்லுங்கள்! என்று முழங்கு கின்றன. நாவலின் இறுதியில், கடவுளின் சக்தியால் முஸ்லிம் ஆதிக்கம் ஒழிந்தது; இனி பிரிட்டிஷ் ஆட்சி தொடங்கும்; அவர்கள் இந்துக்களின் நண்பர்களாக இருப்பார்கள்! ஆகவே, போராட்டத்தை நிறுத்திக் கொள்வீராக!" என்று அசரீரி ஒலிக்கிறது.



**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்

வைணவத் தலைவராகச் சுவாமி சத்யானந்தா என்ற துறவிப் பாத்திரமும், அவரின் சீடராகக் குருபவானந்தா என்ற ஓர் இளைஞர் பாத்திரமும் இடம்பெற்றதோடு, அவர்களின் உரையாடலில் வைணவ இந்து இளைஞர்கள் ஆயுதம் தாங்கி முஸ்லிம்களுக்கு எதிராகப் போராட வேண்டும் என்பதே ஆனந்த மடம் கதையாக இருந்தது. அதில்தான் வந்தே மாதரம் பாடல் இடம்பெற்றது.

"இப்படி இருப்பதை முஸ்லிம்கள் மட்டுமல்ல, கிறிஸ்தவ, புத்த, சமண, சீக்கிய, பார்சி உள்ளிட்ட பிற சமயங்களை சேர்ந்தவரும் எப்படிப் பாடுவார்கள்? இப்பாடலை தேசிய பாடலாக எப்படி ஏற்பார்கள்?" என்று ஜின்னா போன்றவர்கள் காந்திக்குக் கடிதம் எழுதிக் காங்கிரஸ் மாநாடுகளில் இது போன்ற பாடலை ஏற்க முடியாது என்று அப்போதே கூறினார்கள். 1939 ஆம் ஆண்டு காங்கிரஸில் இருந்த உயர் ஜாதியினர் காங்கிரஸ் கூட்டங்கள் இருப்பதை பாடி வந்த போது 1939 ஆம் ஆண்டு முஸ்லிம் லீக் கட்சி எதிர்ப்பு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது. வங்காள பிரிவினையின் போது ஆங்கில அரசே இப்பாடலுக்கு தடை விதித்தது. இந்தப் பாடலை தேசிய கீதமாக உயர் ஜாதியினர் ஆக்கம் வென்ற போது முஸ்லிம்கள் எதிர்ப்பு வலுக்கவே அந்த முயற்சி கைவிடப்பட்டது. மகாத்மா காந்தி இந்தப் பாடலை பின்பு ஆதரிக்கவில்லை. காங்கிரஸ் கூட்டங்களில் இதனை பாடவும் அவர் அனுமதிக்கவில்லை. அதே காலகட்டத்தில் இந்தியா முழுவதும் உணர்ச்சி பொங்க பாடப்பட்ட பாடல் கவிஞர் அல்லாமா இக்பால் எழுதிய "சாரே சஹான்சே அச்சா" பாடல் ஆகும். இப்படி இந்நாள்களில்கூடக் குஜராத் கோத்ரா சம்பவத்தில் 3,000 இஸ்லாமியர்கள் கொல்லப்பட்ட போதும், பாபர் மசூதி இடிக்கப்பட்ட போதும் வந்தே மாதரம் பாடல் தான் முதலில் கூட்டத்தில் குரல் உயர்த்திக் கோஷமாக எழுப்பப் பட்டது.

முஸ்லிம்களை வென்றார்கள் தவிர, ஆங்கிலேயர்கள் ஆட்சி அகலவில்லை. "இந்துக்கள் ஆட்சி வரும் என்று நினைத்தது நடக்கவில்லையே" என்று துறவி சத்யானந்தா விடம் அந்த இளைஞர்கள் கேட்கின்றனர். அதற்கு அந்த துறவி, "இப்போது நமக்கு எதிரிகள் யாரும் இல்லை; ஆங்கி லேயர்கள் நமது நண்பர்கள்; அவர்கள் தங்கள் அதிகாரங்களை அனைத்தையும் விஷ்ணுவுக்கே காணிக்கையாக்கி இருக்கிறார்கள்" என்று கூறுகிறார். இத்துடன் அந்தக் கதை முடிவதாக உள்ளது. ஆகவே, இப்படி அந்த நாவலில் இடம்பெற்ற வந்தே மாதரம் பாடலை ஏற்க முடியாது என்று முஸ்லிம் லீக் மட்டுமல்லாமல், காங்கிரசுக்குள்ளே பலரும் பிரச்சாரம் செய்ய தொடங்கினர்.

கவிஞர் அல்லாமா இக்பால் எழுதிய தேசிய கீதம் எல்லா மதப் பிரிவினருக்கும் பொதுவானதாகவும், சமயச் சார்பற்றதாகவும் உள்ளது. உருது மொழியில் மிக மன எழுச்சியூட்டும் பாடல் மட்டுமல்ல; அது இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும், மத நல்லிணக்கத்தைத் தூக்கிப் பிடிக்கும் உணர்ச்சிப் பாடல். மதவெறியை கண்டனம் செய்த பாடலாக அமைந்திருந்தது என்றாலும், அதனைக் கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. ஏன் என்று முஸ்லிம்களால் பார்க்கப்பட வேண்டியதாயிற்று. பிரிட்டிஷ் அரசு அதைக் கையில் எடுத்துக் கொண்டது.

இரவீந்திரநாத் தாகூர் இந்தியாவில் உள்ள பல்வேறு மொழிகள் பேசும் அனைத்து இனங்களையும் ஒருங்கி ணைக்கக் கூடிய வகையில் அமைந்துள்ளது என்றும்,பக்கிம் சந்திர சாட்டர்ஜி எழுதிய வந்தே மாதரம் பாடல் அவ்வாறு அனைத்து இனங்களையும் ஒருங்கிணைக்கக் கூடியதாக இல்லை என்றும் முடிவு செய்து தாகூரின் பாடலையே தேசிய கீதமாக ஏற்கப்பட்டது. வந்தே மாதரம் பாடல் குறிப்பிட்ட ஒரு மதத்தை மட்டுமே சார்ந்ததாகவும், வங்காள மொழி பேசும் குறிப்பிட்ட ஓர் இனத்தைச் சார்ந்ததாகவும் அமைந்திருப்பதால்; அது தவிர்க்கப்பட்டது. குறிப்பாக முஸ்லிம்கள், கிறித்துவர்கள், சமணர்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள் அந்தப் பாடலுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

பங்கிம் சந்திர சாட்டர்ஜி (Bankim Chandra Chatterjee) 1874 இல் சமஸ்கிருதம் கலந்த வங்காள மொழியில் எழுதிய 'ஆனந்த மடம்' நாவல் 1882 இல் வெளியிட்டார். அதில் இடம்பெற்ற வந்தே மாதரம் பாடலுக்கு 1876 இல் ஜாதுநாத் பட்டாச்சாரியா மெட்டு அமைத்து, இசைத்திருந்தார். 1905 இல் பனாரஸ் மாநாட்டில் சரளாதேவி சாது ராணி வந்தே மாதரம் பாடல் பாடி மூலப் பாட்டிலுள்ள ஏழு கோடி மக்கள் என்று இருந்ததை மாற்றித் திருத்தி முப்பது கோடி என்று பாடினார்.

இந்தியா சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட போது, தேசபக்தியின் சின்னமாக விளங்கிய இப்பாடலைப் பொது இடங்களில் பாடத் தடை விதிக்கப்பட்டிருந்தது. கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் இதை முதன் முதலில் 1896 இல் இரகமத்துல்லா எம். சயானி என்பவர் தலைமையில் நடந்த கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில், பாடி இசையமைத்தார். 'வந்தே' என்றால், 'வணங்குகிறேன்' என்றும், 'மாதரம்' என்றால் 'அம்மா' அல்லது 'தாய்' என்றும் பொருள்.

1937 இல் மாநில சட்டமன்றங்கள் உருவான பிறகு இப்பாடல் வந்தே மாதரம் பாடலுடன் தொடங்கும் என்று காங்கிரஸ் முடிவெடுத்து அறிவித்தது. ஆனால் முஸ்லிம் உறுப்பினர்கள் அதை ஏற்றுக் கொள்ளாமல், இது இந்து அரசு என்று விமர்சனத்துடன் வெளிநடப்பு செய்து வந்தனர். இந்நேரத்தில் 1937 இல் காங்கிரஸ் இயக்கம், கல்கத்தாவில் கூடியது........ வந்தே மாதரத்தை தேசிய கீதமாக ஏற்றுக் கொள்ள தகுதி நிர்ணயம் செய்ய ஒரு குழு செயற்குழு ஒன்றை காங்கிரஸ் அமைத்தது. அதில் மௌலானா ஆசாத், ஜவர்கலால் நேரு, சுபாஷ் சந்திர போஸ், ஆச்சார்யா நரேந்திர தேவ் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர் என்றாலும், இரவீந்திரநாத் தாகூரின் ஆலோசனையையும் பெறக் கேட்டுக்கொள்ளப் பட்டது.

ஆதரவு, எதிர்ப்பு என இரு தரப்பு மக்களுடையே நிலவி வந்த நிலையில் , ஆங்கி லேய ஆதிக்க எதிர்ப்பில், நாட்டு மக்கள் அனைவரது ஈடு இணையற்ற ஒற்று மையும், ஒத்துழைப்பும் எவ்வகையிலும் இடை யூறுக்கு உள்ளாகி விடக் கூடாது என்ற கவனமும், கவலையும் காந்தி யார் உள்ளிட்ட தலைவர்களுக்கு இருந்து வந்தது. இந்நிலையில் அரசியல் அமைப்பு அவை (Con stuent Assembly) தலைவ ராக இருந்த இராஜேந்திர பிரசாத் எதிர்பாளர்களுக்குப் பதில் கூறும் விதத்தில், "இப் பாடல் உருவ வழிபாட்டை வலி யுறுத்த வில்லை. துர்கா எந்தச் சிலையையும் குறிக்க வில்லை. இது தாய் நாட்டிற்கு மற்றொரு பெயர்" என்று கூறினார். இது எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போல ஆனது. இதற்கு இறுதிப் புள்ளி வைப்பது போல, 1937 இல் வந்தே மாதரம் பாடலில் முதல் இரண்டு சரணங்க ளை (Stanza) மட்டும் பாடப் பரிந்துரைத்தது ஆய்வின் தேர்வுக் குழு. காங்கிரஸ் செயற்குழு அமைத்த கமிட்டிக்கு இரவீந்திரநாத் தாகூர் (26.10.1937) இல் நேருவுக்கு எழுதிய கடிதத்தின் படி, 2 பத்திகள் மட்டும் ஏற்று மற்ற பத்திகள் நீக்கப்பட ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்திய நாட்டில் ஏற்கப்பட்ட பாடல்கள் இரண்டு. அதில் ஒன்று நாட்டுப்பண் அதாவது தேசிய கீதம் (National Anthem), மற்றொன்று தேசிய பாடல் (National song) என்பதாகும்.

திருமணம் செய்த புதிதில் 5ஆம் ஜார்ஜ் மன்னரும், இராணி மேரியும் இந்தியாவுக்கு வருகை தருகிற நேரத்தில்; வரவேற்கும் விதமாகப் பாடல் ஒன்றை எழுதித் தரத் தாகூரிடம் கூறப்பட்டது. தொடக்கத்தில் மறுத்த அவர், பின் எழுதிக் கொடுத்த பாடலே 'ஜன கண மன' எனும் பாடலாகும். தேசிய உணர்வைத் தட்டி எழுப்புகிற அனைவரும் போற்றும் பன்முகக் கலாச்சாரப் பாடல் இது. இதில் எந்த இடத்திலும் அரசர், அரசியர் பற்றி வாழ்த்திப் பாடவில்லை. வெள்ளைத்துரையர் தமக்கு வழங்கியிருந்த சிறப்பு விருது (Knight hood) இனி எனக்கு வேண்டாம் எனத் திருப்பித் தந்தவர் தாம் இரவிந்திரநாத்தாகூர்.

இந்தியா விடுதலை பெற்ற பின்பு, அரசியல் நிர்ணய மன்றத்தில் விவாதம் நடத்தி, பல்வேறு தலைவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து, இறுதியில் ஏற்றுக்கொண்ட வந்தே மாதரம் முதல் இரண்டு பத்திகள் (stanzas சரணங்கள்) மட்டும் ஏற்றுக்கொள்வதுடன், மற்ற 6 பத்திகளை நீக்கி வெளியிடப்பட்டது. அதைத்தான் இதுவரை ஒன்றிய அரசு பின்பற்றியும் வருகிறது. ஆனால், அதனை மீறுகிற வகையில் மோடி அரசு "சமூகத்தின் அனைத்துப் பிரிவினரின் பங்கேற்புடன், வந்தே மாதரம் பாடல் பொது இடங்களில் பரப்பப்படும் என்றும், வந்தே மாதரம் பாடலின் முழுப் பதிப்பு (அதாவது நீக்கப்பட்ட பகுதிகளையும்) பாடப்படும் என்றும், ஒன்றிய பண்பாட்டுத் துறை அமைச்சகம் கடந்த அக்டோபர் ஒன்றாம் தேதி அறிவித்துள்ளது. தகுந்த தரவுகள் மூலம் அறியப்படாமல் இருக்கும் போது, 2025 நவம்பர் 7 என்று எந்த ஆதாரத்தின் அடிப்படையில் 150 ஆவது ஆண்டு கொண்டாட்டங்கள் கொண்டாடப்படும் என்று மோடியின் பா.ஜ.க. அரசால் அறிவிக்கப்பட்டது?

கடந்த கால அரசியலமைப்புச் சட்ட விதிமுறைகளை மாற்றிச் சமுதாய மக்களிடையே பிளவுபடுத்தும் நோக்கத்தில் மோடி அரசு 'இந்துத்துவா' மதவெறிக் கொள்கையைப் புகுத்துகிறது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இது மதநல்லிணக்கம் கொண்ட மனிதநேயம் மிக்க தேசப் பக்தர்கள் ஆன சட்ட வல்லுனர்கள் கேள்வி எழுப்பி நிற்கிறார்கள்.